**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்**

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 தைத் திங்கள் 08–ஆம் நாள்**

**அமர்வு வழக்கு எண் 302/2015–இல்**

**குற்றவியல் பல்வகை மனு எண்.01/2025**

**அருண் (எ) அருண்குமார், வயது 37,**
**த/பெ.கோவிந்தசாமி .. மனுதாரர்/05–ஆம் எதிரி.**

**–எதிர்–**

**தமிழ்நாட்டு அரசுக்காக**
**ஆட்டையாம்பட்டி காவல் நிலைய**
**காவல் ஆய்வாளர்.**
**குற்ற எண் 317/2014 ...எதிர்மனுதாரர்/புகார்தாரர்.**

இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. எட்வின் ஆசிர்வாதம்** அவர்களும் எதிர்மனுதாரருக்காக அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்குரைஞர் **திரு.R.மணிகண்டன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் மனு, ஆட்சேபனை, வழக்குக் கோப்புகள் ஆகியவற்றைப் பரிசீலித்தும் இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

### முகவுரை

அரசு தரப்பு 30-ஆம் சான்றாளராக புலனாய்வு அதிகாரியை கூடுதல் குறுக்குவிசாரணை செய்வதற்கு மீண்டும் அழைக்கக் கோரி குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் 311-ஆம் பிரிவின்கீழ் இந்த மனு மனுதாரர்/05-ஆம் எதிரியால் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

## மனுவின் சுருக்கம்

01. மனுதாரர் உள்ளிட்ட எதிரிகளுக்கு எதிராக இந்திய தண்டனை சட்டத்தின் 120(B), 147, 148, 341, 302, 302 உடன் இணைந்த 149 ஆகிய பிரிவுகளின்கீழான குற்றங்களுக்கான குற்றச்சாட்டுக்கள்மீது வழக்கு விசாரணை நடைபெறுகிறது. சம்பவ இடத்தில் 02.09.2014-ஆம் தேதியன்று விஜயன் என்பவரின் சடலம் கிடைந்துள்ளது. 15.11.2014-ஆம் தேதியன்று காலை 9.00 மணிக்கு மனுதாரர்/05-ஆம் எதிரி அருண் (எ) அருண்குமார் வீரபாண்டி கிராம நிருவாக அலுவலர் செல்வம்(PW-6) என்பவரிடம் வழக்குச் சம்பவம் சம்மந்தமாக ஒப்புதலுரை அளித்ததாகவும் அதன்பேரில் வழக்குச் சம்பவத்தை நிகழ்த்தியது எதிரிகள்தான் என்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அரசு தரப்பு வழக்கில் முதன்மையாக சொல்லப்பட்டுள்ளது.

02. கிராம நிருவக அலுவலர் செல்வம்(PW-6) சாட்சியமளித்தபோது பல சங்கதிகளை கூறினார். அச் சங்கதிகளில் பல புலனாய்வின்போது அவர் அளித்த வாக்குமூலத்தில் சொல்லாதவை. அது குறித்து செல்வத்திடம் மனுதாரர்/05-ஆம் எதிரி உள்ளிட்ட எதிரிகள் தரப்பில் கேள்விகள் கேட்கப் பட்டு முரண்படுத்தப்பட்டார். அதுச் சம்மந்தமான முரண்பாடுகள் குறித்து புலனாய்வு அதிகாரியான அரசு தரப்பு 30-ஆம் சான்றாளர் சம்பத்திடம் எதிர்பாராதவிதமாக கேட்கத் தவறிவிட்டனர். அந்த முரண்பாடுகள் குறித்து புலனாய்வு அதிகாரியிடம் கேள்விகள் கேட்பது அவசியமாக உள்ளது. ஆகையால், இம் மனுவை அனுமதித்து அரசு தரப்பு 30-ஆம் சான்றாளரான புலனாய்வு அதிகாரி சம்பத்தை மீண்டும் அழைத்து கூடுதல் குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரர்/05-ஆம் எதிரிக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

03. புலனாய்வு அதிகாரியை மனுதாரர் உள்ளிட்ட எதிரிகள் தரப்பில் விரிவாக அனைத்துச் சங்கதிகளையும் குறித்துக் குறுக்குவிசாரணை செய்து-விட்டனர். நீண்டநாளாக நிலுவையில் இருந்துவரும் இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டுவரவிடாமல் செய்யும் நோக்கத்தில் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

04. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

05. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. மனு, எதிருரை, வழக்குக் கோப்புகள் ஆகியவை ஓர்வுசெய்யப்பட்டன. சான்றாளர் ஒருவர் புலனாய்வில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணான சங்கதிகளையோ புலனாய்வில் சொன்ன வாக்குமூலத்தில் சொல்லாத புதிய சங்கதிகளையோ சாட்சியம் அளித்தபோது கூறினால் குறுக்குவிசாரணையில் அது குறித்து அந்தச் சான்றாளரிடம் வினாக்கள் தொடுத்து முரண்படுவதோடு மட்டு மல்லாமல் அது குறித்து அந்தச் சான்றாளரிடம் புலனாய்வின்போது வாக்கு-மூலம் பதிவுசெய்த புலனாய்வு அதிகாரியையும் குறுக்கு விசாரணையின்-போது கேள்விகள் கேட்டு விசாரணை செய்தால்தான் முரண்பாடு சம்மந்த -மான சாட்சியத்தை கவனத்தில்கொள்ள முடியும் என்பது மாண்பமை மேலமை நீதிமன்றங்களால் நன்கு நிறுவப்பட்டச் சான்றியல் விதி ஆகும்.

06. மனுதாரர்/05-ஆம் எதிரியும் அந் நோக்கத்திற்காகவே கூடுதல் குறுக்குவிசாரணை செய்ய வேண்டும் என்று இம் மனு மூலம் கோரியுள்ளார். காலதாமதம் என்ற குறையைத் தவிர இந்த மனுவை நிராகரிப்பதற்கான எந்தவொரு முகாந்திரமும் இல்லை என்று இந் நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால், செலவுத்தொகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனுவை அனுமதிப்பதே உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

07. இறுதியாக, மனுதாரர்/05-ஆம் எதிரி 02.02.2026-ஆம் நாளுக்குள் சேலம் மாவட்ட சட்டப் பணிகள் ஆணை குழுவில் 3,500/- உரூபாயை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 23–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V

Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.01.23 19:48:15 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**